# பத்திரிக்கை செய்தி

## வாரிசு சான்றிதழ் கொடுக்க லஞ்சம் கேட்டு பெற்ற பொறிவைப்பு நடவடிக்கை வழக்கில் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் உதவியாளர் அவர்களுக்கு தண்டனை வழங்கி தீர்ப்பு

புகார்தாரர் கிருஷ்ணராயபுரம், கரூர் மாவட்டத்தில் வசித்து வந்தார், தன்னுடைய மாமனார் இறந்த காரணத்தினால் கிருஷ்ணராயபுரம் கிராம நிர்வாக அலுவலகம், கிருஷ்ணராயபுரம் வடக்கு கிராமம், கரூர் மாவட்டத்தில் வாரிசு சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.பெரியசாமி, முன்னாள் கிராம நிர்வாக அலுவலர், மற்றும் திரு.கிருஷ்ணன், கிராம அலுவலர் ஆகியோர் தங்களுக்கு லஞ்சமாக ரூ.1,200/- கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் குற்றஎண்.16/2010 படி வழக்குபதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து மேற்கொண்ட புலன் விசாரணையில், 26.05.2010 தேதியன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, அதில் எதிரிகள் புகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.1,200/-த்தை கேட்டு பெற்றுக்கொண்ட போது கையும் களவுமாக கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிவுற்று எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு கரூர் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு இன்று 13.03.2023 எதிரி திரு.பெரியசாமிக்கு சட்டப்பிரிவு 7of PC Act-ன் 1988 கீழ் 2 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.10,000/- அபராதமும், சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 3 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.10,000/- அபராதமும் விதித்து தண்டணையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் மற்றும் எதிரி திரு.கிருஷ்ணனுக்கு சட்டப்பிரிவு 12 of PC Act-ன் 1988 கீழ் 1 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.10,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

# PRESS NOTE

## Vilage Administrative Officer and Assistant convicted in bribe case

In the year 2010, the complaint applied for legal heir certificate at Krishnarayapuram Village Administrative Office, Krishnarayapuram North, Karur District, for which Tr.Periyasamy, Village Administrative Officer and Tr.Krishnan, Village Assistant demanded Rs.1,200/- for processing his application. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti– Corruption, Trichy Detachment. In this connection a trap was organized. On 26.05.2010 trap was laid against the accused and they were caught red-handed while demand and acceptance of bribe money Rs.1,200/- from the complainant. On completion of investigation, the case was charge sheeted against the accused. The case was tried before the Spl. Court for PC Act, Cases, Karur. Today 13.03.2023 the Special Court pronounced the judgement against Tr.Periyasamy, formerly Village Administrative Officer convicted for 2 years Rigorous Imprisonment and with fine Rs.10,000/- u/s 7 and concurrently 3 year Rigorous Imprisonment and with fine Rs.10,000/- u/s.13(2) & 13(1)(d) of the Act. The accused Tr.Krishnan, Village Officer, convicted for 1 year Rigorous Imprisonment and with fine Rs.10,000/- u/s 12 of PC Act 1988.